முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1191

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

02.01.2023, திங்கட்கிழமை

1. வரம்பெற்று வந்த வள்ளலே
வாழுகின்ற ஞானியே அரங்கனே
அறம்சேர்த்து இந்த பேருலகை
ஆற்றல்மிக்க ஞான லோகமாக மாற்ற வந்த தவராஜனே
2. அரசனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் மார்கழி மாதம் 18 ம் நாள் 02.01.2023, திங்கட்கிழமை)
தரணியில் அரங்கன் உன் அவதார நோக்கம்
தக்கபடி உலகோர்க்கு சென்று செல்ல உலகோர்க்கு இனிதே ஆற்றலாகச் செல்ல
3. செல்லவே அரங்கன் தருகின்ற உபதேசத்தின் மூலமும்
சிறப்பான அரங்கனின் தர்மத்தின் மூலமாகவும்
வல்லமைபட உலகோர்கள் ஆற்றல் கூடி
வையகத்தைக் காக்கும் சக்தி உள்ள மாந்தர்களாக
4. ஆகவே மாறி அற்புதம் நடத்துவர்
அரங்கன் வழி ஞானத்தில் தேறி அழியாமை பெற்று இனிதே
இனிதே ஞான யுகமாற்றத்தை
இலகுவாக அரங்கன் மூலம் செய்து முடிப்பர்
5. ஆகவே இந்த அற்புதங்கள் நிகழ
அரங்கனை நோக்கி உலகோர் வரவேண்டும்
வகையான தர்மத்தை செய்து கொண்டு
முழுமைபட சன்மார்க்க வழி வந்தால்
6. வந்தாலே வையகம் அரங்கன் ஆசி பெற்ற
வடிவேலன் என் தலைமை கொண்ட
விந்தை மிகு ஞான ஆட்சிக்காலமாகவும்
விரைந்து ஞான யுகமாற்றமாகவும் நடந்தேறும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–